*அண்டைவாசியாளர்களை சந்திப்பது எப்படி* என்ற உபகரணத்தை வாடிக்கையாளர் சேவையின் மூலமோ அல்லது www.holroyd.nsw.gov.au என்ற முகவரியில் *சமுதாயதின் பாதுகாப்பு* என்பதனடியிலிருந்து தரவிறக்கம் செய்துகொண்டால் உங்களது அண்டைவாசியாளர்களை பற்றி மேலும் அறியத் தேவையான கருத்துக்களை பெறலாம்.




மக்களின் உண்மையான தேவைகளை அறிந்து கொள்வதில் சமுதாய உறுப்பினர்களிடமிருந்து கிட்டும் தகவல்கள் நகரவைக்கு உதவுகின்றன.

பரிந்துரைக் குழுக்கள் குறித்த தகவல்களை அறிய், எங்களது www.holroyd.nsw.gov.au என்ற வலையதளத்திற்கு விஜயம் செய்யுங்கள் அல்லது 9840 9840 என்ற எண்ணை அழையுங்கள்.



ஹொல்ராய்ட் நகர சபை
**(Holroyd City Council)**
**16 Memorial Avenue**
**Merrylands NSW 2160**
தொலைபேசி எண் : **9840 9840**
தொலைநகல் : **9840 9734**
மின்னஞ்சல் : **web2@holroyd.nsw.gov.au**
**www.holroyd.nsw.gov.au**

இந்த விவரங்கள் www.holroyd.nsw.gov.au என்ற வலைத்தளத்தில், ‘சமூகப் பாதுகாப்பு’ *(Community Safety)* எனும் தலைப்பின் கீழ், கீழ்கண்ட மொழிகளில் கிடைக்கும் :

அரபு
தமிழ்
ஹிந்தி
டிங்கா
எளிமையான சீன மொழி
சம்பிரதாய சீன மொழி

தேசிய சமூகக் குற்றத் தடுப்புத் திட்டத்தின் கீழ் இந்த திட்டத்திற்கு நிதி வழங்கப்பட்டது.

NATIONAL COMMUNITY
CRIME PREVENTION
PROGRAMME

Australian Government

Holroyd City
Built Around People



# உங்கள் சமூக அமைப்புப் பணியில்



## சமுதாயமென்பதென்ன?

கீழ்காணும் ஏதேனும் பொதுவான தொடர்புறவு அல்லது அடையாளத்தினைப் பகிர்ந்து கொள்ளும் மக்கள் குழுவினையே சமுதாயமென்கிறோம்.

- ஒரு பொது ஆர்வம்
- ஒரு பணியிடம்
- ஒரு கலாச்சாரம்
- ஒரு வாழ்க்கைப் பாங்கு

நமது அக்கம்பக்கத்தில், தெருவில் மற்றும் தொடர்வீடுகளில் வாழும் மக்களும் ஒரு சமுதாயமே. பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் உறுதியான சமுதாயத்தினை உருவாக்குவதில் நல்ல அண்டைவாசியாளர்கள் உதவுவர்.



பலமான சமுதாயம் அக்கம்பக்கவாசியருக்குப் பாதுகாப்பு மற்றும் ஒற்றுமை உணர்வினையளித்து அவரது சமுதாய வளர்ச்சிக்குப் பங்களிக்கவும் அவர்களுக்கு உதவும்.



## ஒரு பலமான சமுதாயமென்பதென்ன?

சமுதாய உறுப்பினர்கள் அதில் ஓர் அங்கம் என்று ஒன்றுபட்டு இணைந்து ஒரு பொது குறிக்கோளை அடைய உழைக்க விரும்பும் சமுதாயமே பலமான சமுதாயமாகும்.



பலமான சமுதாயத்தில் வாழும் மக்கள் எப்பொழுதும் அவர்கள் தெருவில் நடந்து செல்லும் பொழுது பாதுகாப்பாக உணருவர் மற்றும் அக்கம்பக்கத்தினரைப் பற்றி நல்ல, நேர்மறைக் கருத்துக்களையே வைத்திருப்பர்.

ஒரு பலமான சமுதாயம் எப்பொழுதும் கீழ்கண்டவற்றைக் கொண்டிருக்கும் :

- வலுவான சமுதாயத் தொடர்புகள் - ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கும் உறுப்பினர்கள்.
- உற்சாகமாகச் செயல்படும் சமுதாய உறுப்பினர்கள் - சமுதாயத் திட்டங்களில் தன்னிச்சையாய்ப் பணியாற்றும் உறுப்பினர்கள் அல்லது கற்றல் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் உறுப்பினர்கள்

## ஏன் பலமான சமுதாயம் முக்கியம்?

பலமான சமுதாயம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நன்மை செய்கிறது. பலமான சமுதாய பந்தத்திலிருக்கும் மக்கள் கீழ்கண்டனவற்றைக் கொண்டுள்ளதாக ஆய்வு காட்டுகிறது:

- அதிசிறந்த ஆரோக்கியமான உடல்நிலை
- நெருக்கடியின் போது மிகுந்த ஆதரவுகள்
- சுற்றுப்புறங்களில் பாதுகாப்பாக உணருதல்
- சமுதாய மற்றும் கலாச்சார வகைகளைச் சிறப்பாய்ப் புரிந்து கொள்ளல்
- சமுதாய முடிவெடுப்புகளில் பங்கேற்பு

## என்னுடைய சமுதாயத்திற்கு வலுவூட்ட நான் செய்யவல்லதென்ன?

ஒரு பயனுள்ள சமுதாயத்தினை அமைக்கும் பணியினை நம்முடைய அண்டை-அயல் பகுதிகளை உருவாக்குவதின் மூலம் ஆரம்பிக்கலாம்.

- உள்ளூர்ப் பகுதியில் உள்ள வர்த்தகத்திலோ அல்லது அக்கம்பக்க சங்கத்திலோ சேருங்கள்
- உங்கள் பகுதியில் நத்துவதற்கென நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்யுங்கள்
- உங்கள் தெரு மற்றும் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் மக்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்
- ஹொல்ராய்ட் நகர சபை சமூகச் செயற் குழுவில் சேருங்கள்
- அண்டைவாசியருக்கு உதவுவதற்கென சிறிது நேரத்தினைச் சுயவிருப்புடன் ஒதுக்குங்கள்.
- புதிதாய்க் குடியேறுபவர்களை வரவேறுங்கள்.